## மாத்தறை மாநகர சபை
## மாத்தறை மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 27 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மாத்தறை மா நகர சபையின் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் நகர முதல்வர் சான்றுபடுத்தியிருக்கவில்லை. அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 15 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 17 திகதியும் சபைக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து மாத்தறை மாநகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 256,483 தொகைக்கான ஆயுர்வேத மருந்துகளின் இருப்பு மற்றும் ரூபா 526,812 தொகைக்கான வாகனங்கள் கழுவும் நிலையத்தின் மீதி இருப்பினை கணக்கீடு செய்யப் பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமை ஏற்படாதவாறு செயற்படுவேன். |
| (ii) | கடந்த ஆண்டு களஞ்சியத்தில் இருந்து வழங்குதல்கள் ரூபா 811,066 தொகை குறைவாகக் கணிக்கப்பட்டமையால் இறுதி இருப்பு அப் பெறுமதியினால் மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வேன். |
| (iii) | மீளாய்வாண்டு இறுதி அளவிலும் வழங்குனர் ஒருவருடன் ஈடுபாட்டுப் பொறுப்பு ஏற்படுத்தி இருக்காத ரூபா 8,750,000 தொகை பெறுமதியான சாக்கடை வாகனம் கொள்வனவு செய்வதற்காக பலவின கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஒரே செலவுக்காக இரண்டு வருடங்களில் ஏற்பாடுகள் ஒதுக்கு வதற்கு நேரிட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய நிர்மாணவேலை பிடிபணம் ரூபா 479,296 தொகை கடன்கொடுத்தோர் மற்றும் வைப்பு மீதியில் அடங்கியிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வேன். |
| (v) | முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் கணக்கின் மீதி மற்றும் சபைக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகளின் பௌதீக மீதியிடையே காணப்பட்ட வித்தியாசம் நாட்குறிப்வு பதிவு 4 இன் மூலம் சீர்செய்யும் போது ரூபா 1,669,000 தொகை பெறுமதியான 02 டிரக்டர்களின் பெறுமதி உட்படுத்தப்பட்டிருக்காமையால் அக் கணக்கின் மீதி ரூபா 1,669,000 தொகையினால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கப்படவில்லை. |
| (vi) | முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளவாறு வீதவரி கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி மற்றும் வீதவரி மென்பொருள் பதிவின் பிரகாரம் மீதி இடையே காணப்பட்ட ரூபா 8,284,866 இற்கான வித்தியாசத்தினை சரியாக இனங்காணாமல் நாட்குறிப்பு இலக்கம் 51 இன் மூலம் திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் செய்தமையால் அக் கணக்கின் மீதி ரூபா 8,284,866 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கப்படவில்லை. |
| (vii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பஸ் நிலைய கடைத் தொகுதியின் கடன் கணக்கின் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தல் இடையே காணப்பட்ட ரூபா 7,466,103 இற்கான வித்தியாசத்திற்கான காரணத்தை சரியாக இனங்காணாமல் நாட்குறிப்பு இலக்கம் 49 இன் மூலம் திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திரண்ட நிதியக் கணக்கு ரூபா 7,466,103 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கடன் மீதியின் உறுதிப் படுத்தல் ஒன்று பெற்றுக்கொண்டு 2020 கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வேன். |
| (viii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலைச் செலவுகளுக்காக ரூபா 969,719 தொகை மிகையாக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | மதிப்பீட்டுத் தொகை மற்றும் சிட்டையிடப்பட்ட பெறுமதி இடையே காணப்பட்ட வித்தியாச த்தை நாட்குறிப்பு பதிவு களின் மூலம் சரிசெய்வேன். |

| | | | |
|---|---|---|---|
| (ix) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நிர்மாண வேலைக் கடன்பட்டோருக்காக ரூபா 1,775,587 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வேன். |
| (x) | கடந்த ஆண்டின் போது ஏல விற்பனையின் மூலம் அகற்றப்பட்டிருந்த நிலையான சொத்துக்களின் கிரயத்தை உறுதியாக இனங்காணாமல் ரூபா 1,389,280 இற்கான பெறுமதி ஒன்று கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | அகற்றப்பட்ட நிலையான சொத்துக்களை பதிவேடுகளில் இனங்காண முடியாதுள்ளது. |
| (xi) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்துக்கு செலுத்த வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 46,898,225 தொகைக்கான பங்களிப்புத் தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | தகவல்கள் ஓய்வூதியத் திணைக்களத்துக்கு அனுப்பி தொடர் நடவடிக்கை எடுப்பேன். |
| (xii) | மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வேன். |
| (xiii) | எரிபொருள் நிரப்பு நிலையம் நிர்மாணிக்கும் நிர்மாணவேலைக்காக ஒப்பந்தக்காரருடன் மீளாய்வாண்டின் போது உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும், அதற்காக ரூபா 50,000,000 இற்கான கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஒரே செலவுக்காக இரண்டு வருடங்களில் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள கூட்டுத் தொகை ரூபா 77,132,972 தொகைக்கான 07 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காணப்படும் மீதிகள் இடையே, கூட்டுத்தொகை ரூபா 17,934,458 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 65,109,174 தொகைக்கான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமான மெய்மையாய்தல் செய்வதற்கு முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக் களில் காட்டப் பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை நாளது வரை ஆக்குவதற்கு மற்றும் வித்தியாசங்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது. |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 571 | 2 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 9,749,163 பெறுமதியான வைப்புக்களை ஆதன வளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன். |
| (ஆ) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கை | மாநகர சபைக்கு சொந்தமான 21 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | திருத்த வேலை மேற்கொள்ளப்பட்ட பின்னர் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்வேன். |
| (இ) இலக்கம் 01/2018 மற்றும் 2018 மார்ச் 19 ஆம் திகதிய திறைசேரிச் செயலாளரின் சுற்றறிக்கை | பாவனையில் இருந்து அகற்றப்பட்ட 10 வாகனங்கள் மற்றும் இயந்திரங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 6 வாகனங்கள் தொடர்பாக ஆரம்பப் பதிவினை இரத்துச் செய்த பின்னர் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | தாபனக் கோவை யின் அத்தியாயம் V பிரிவுகள் 1, 3 மற்றும் அத்தியாயம் XII | தாபனக் கோவையின் அத்தியாயம் V பிரிவு I இன் பிரகாரம் பதவி ஒன்றில் இருந்து விடுவிக்கப்படாமல் அலுவலக உதவியாளர் ஒருவரினால் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் பதவி ஒன்றுக்கு சேர்க்கப்பட்டிருந்த துடன் தாபனக் கோவையின் அத்தியாயம் V பிரிவு 3 இற்கு இணங்காத வகையில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் ஏற்கனவே அறிவிக்காமல் கடமைக்கு சமூகமளிக்காதிருந்த போதிலும் தாபனக் கோவையின் அத்தியாயம் XII இன் பிரகாரம் 06 நாட்களுக்காக அமைய விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | தாபனக் கோவையின் அத்தியாயம் V பிரிவு I,3 மற்றும் அத்தியாயம் XII இன் பிரகாரம் செயற்பட வேண்டும். | அலுவலக உதவியாளர் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் பதவி ஒன்று பெற்றுக் கொள்வதாக என எழுத்துமூலம் அறிவித்தல் ஒன்று மேற் கொண்டிருக்காமையால் பதவியில் இருந்து விடுவித்தல் மேற் கொள்ளப்பட்டிருக்காத துடன், அவ்வாறு விடுவித்தல் மேற் கொள்ளப்படாமையால் மீண்டும் பதவியில் அமர்த்துதல் தேவை ஏற்படாது. அவர் கடமைக்கு வராமை தொடர்பாக அப்போதைய நகர ஆணையாளருக்கு வாய்மூலம் அறிவித்திருந்ததுடன், மீண்டும் சேவைக்கு வந்த பின்னர் விடுமுறை அங்கீகரிக்கப் பட்டது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 122,101,310 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 132,779,713 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 10 வருடங்களுக்கும் 28 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியைச் சேர்ந்த ரூபா 34,943 தொகைக்கான 10 மதிப்பளிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 189 இன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங் களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | உறுதியான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியா மையினால் சபைக்கு சமர்ப்பித்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதற்கு செயற்படுகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கொள்ளையடிக்கப்பட்டுள்ள காசு மீதியொன்று உட்படுத்தப்பட்டிருந்த மையால் நடைமுறை சொத்துக்களில் ரூபா 169,360 இற்கான போலி சொத்துக்கள் அடங்கியிருந்ததுடன் குறிப்பிட்ட பணம் கொள்ளை யடித்தல் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த கொள்ளையடிக்கப் பட்ட பணமீதி தொடர் பாக தெளிவான தகவல் ஒன்று பெறப்படாமை மற்றும் குறிப்பிட்ட மீதி கடந்த வருடங்கள் முதல் காணப்படுவது ஒன்றாகும். |

### 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 38,761,718 | 38,053,546 | 44,125,891 | 50,003,159 | 41,384,570 | 38,481,722 | 43,527,300 | 56,075,504 |
| வாடகை | 29,123,440 | 31,946,301 | 30,289,545 | 60,416,031 | 26,381,440 | 30,606,691 | 29,824,618 | 58,759,275 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 30,183,550 | 27,224,055 | 10,654,745 | 17,955,970 | 26,874,700 | 30,135,817 | 25,683,882 | 1,386,660 |
| ஏனைய வருமானங்கள் | 157,304,310 | 176,479,328 | 123,468,522 | 380,590,008 | 93,542,300 | 113,606,910 | 4,791,667 | 327,579,202 |
| மொத்தம் | 255,373,018 | 273,703,230 | 208,538,703 | 508,965,168 | 188,183,010 | 212,831,140 | 103,827,467 | 443,800,641 |

### 2.3.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **வீதவரி**<br>ஆரம்ப நிலுவை ரூபா 47,569,728 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 36,346,183 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடல் மற்றும் மிகைக் கட்டணத்துடன் ரூபா 83,915,911 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 34,080,336 அதாவது 41 சதவீத பெறுமதியினைக் கொண்டிருந்தமையால், வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 49,835,575 தொகை அளவு உயர்ந்த பெறுமதியினைக் கொண்டிருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | கருத்துரை வழங்கியிருக்க வில்லை. |

### 2.3.3 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | **கடை வாடகை**<br>ஆரம்ப நிலுவை ரூபா 46,582,253 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 23,803,065 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 70,385,318 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப் பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 23,418,415 தொகை அதாவது 33 சதவீத பெறுமதியினைக் கொண்டிருந்தமை யினால், வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 46,966,903 தொகை அளவு உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

(ஆ) **நில வாடகை**

| | | |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை ரூபா 6,791,736 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 879,195 தொகை ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 7,670,931 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப் பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 7,670,931 தொகை அதாவது 33 சதவீத பெறுமதியினைக் கொண்டிருந்தமை யினால், வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 7,416,334 தொகை அளவு உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவையை அறவீடு செய்வதற்காக கடிதங்களின் மூலம் அறிவுறுத்தல், இணக்க சபையுடன் தொடர்புபடுத்தல், நில வாடகைக்காரர்களை அழைத்து அறிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்டன. |

## 2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணம்** | | |
| ஆரம்ப நிலுவை ரூபா 7,338,545 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 9,686,850 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 17,025,395 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 9,567,600 தொகையாகக் காணப்பட்ட மையால், வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 7,457,795 இற்கான பெறுமதி ஒன்றினை கொண்டிருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகைக்காக வழக்குத் தாக்கல் செய்து அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) விளம்பரப் பலகைகள் கட்டணம்**

| | | |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை ரூபா 11,265,342 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 15,566,180 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 26,831,522 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப் பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 16,336,348 தொகை அதாவது 61 சதவீத பெறுமதியனை கொண்டிருந்தமை யால், வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 10,495,174 இற்கான பெறுமதி ஒன்றினைக் கொண்டிருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகைக்காக வழக்குத் தாக்கல் செய்து அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்துள்ளேன். |

**2.3.5 ஏனைய வருமானங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| **நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்** | | |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 313,897 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 373,598,210 தொகை முத்திரைக் கட்டணம் பெற வேண்டிக் காணப்பட்டது. | நிலுவை நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| **(அ)** | **துணை விதிகள்**<br>மீளாய்வாண்டின் போது நடைபாதைகளில் வாகனங்கள் நிறுத்துவதற்காக ரூபா 50 தொகை மற்றும் ரூபா 100 தொகை ஆக கட்டணங்கள் அறவீடு செய்து 06 வாகனத் தரிப்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 272 இன் பிரகாரம் துணை விதிகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.<br>பொதுமக்களின் முறைப்பாடுகளின் காரணமான இந்தச் செயன்முறை இடைநிறுத்தப்பட்டுள்ளது. | மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 272 பிரிவின் பிரகாரம் துணை விதிகள் அங்கீகரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பேன். |
| **(ஆ)** | **செய்பணிகளை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**<br>மீளாய்வாண்டின் போது ரூபா 3,749,093 இற்கான உடன்படிக்கை பெறுமதியுடைய 03 நிர்மாண வேலைகளை நிறைவேற்றுவதற்காக 02 அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் மற்றும் ஒப்பந்தக்காரர் ஒருவருடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதி அளவிலும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br>மேலும் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த ஒரு நிர்மாண வேலைக்காக ரூபா 462,235 இற்கான முற்பணத் தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டங்களை விரைவாக செயற்படுத்தப்பட வேண்டும். | இந்த நிர்மாணவேலை அங்கீகரிக்கப்பட்ட காலப் பகுதியில் மிகை மழை தொடர்ந்து காணப்பட்டமையால் 2019 ஆண்டின் போது இந்த நிர்மாணவேலையை செயற்படுத்தி பூர்த்தி செய்ய முடியவில்லை. |
| (இ) | **திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**<br>2015 முதல் மீளாய்வாண்டு ஒக்தோபர் வரையான 04 வருட காலப் பகுதியில் உக்கக் கூடிய குப்பைகள் மற்றும் மீள்சுழற்சி செய்ய முடியாத குப்பைகள் | சுற்றாடல் சிக்கல்கள் ஏற்படாத வகையில் குப்பைகளை | குப்பைகளின் மூலம் மின்சார உற்பத்தி செய்யும் செயற்திட்டம் (waste to energy) நிர்மாண |

| | | |
|---|---|---|
| முறைசாராத விதமாக கொடவில குப்பை முகாமைத்துவ செயற்களத்தில் முறையற்ற விதமாக குவிக்கப்பட்டதனால் சுமார் 20 விசாலமாக குப்பை மலை ஒன்று ஏற்பட்டிருந்தது. | போட வேண்டும். | வேலைகளுக்காக மாத்தறை மா நகர சபைக்கு சொந்தமான சேதனப் பசளை செயற்களம் மற்றும் குப்பைகளை வகைப்படுத்தும் வளவு பயோ கிரீன் ஸய்கல் தனியார் நிறுவனத்திற்கு வழங்குவதற்கு நேரிட்டமை யால் உக்கக் கூடிய குப்பைகளின் மூலம் சேதனப் பசளை உற்பத்தி செய்யும் செயற்பாட்டினை நிறுத்து வதற்கு நேரிட்டிருந்தது. புதிய செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் எதிர்பார்த்த காலவறையுள் பூர்த்தி செய்ய முடியாதிருந்தமை ஆகிய காரணங்களினால் சேகரிக்கப்பட்டிருந்த குப்பைகளை திறந்த வெளியில் போடுவதற்கு நேரிட்டிருந்தமையால் குப்பை மலை ஒன்று ஏற்பட்டிருந்தது. இது வரை அந்த இடத்தில் சேகரமாகியிருந்த குப்பை மலையை மண்ணினால் மூடுதல் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் அந்த இடங்களை மரநடுகை மூலம் பசுமை வலயம் ஒன்றாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 ஏக்கர்கள் 02 ரூட் 37.76 பர்சஸ் அளவுடைய ப்ரவுன்ஸ்ஹில் பாதையில் அமைந்துள்ள பர்ள்கிளிப் எனும் காணியை துணைப் பகிர்வு செய்யும் போது மொத்தக் காணியில் 10 சதவீதம் அளவான 01 ரூட் 19.7 பர்சஸ் பொது அலுவல்களுக்காக ஒதுக்கப்பட்டு சபைக்குச் உரித்தாக்க வேண்டியிருந்த போதிலும் பொது வேலைகளுக்காக பயன்படுத்த முடியாத செங்குத்துச் சரிவான இடத்தில் அமைந்துள்ள 15.7 பர்சஸ் காணித் துண்டு ஒன்று சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் செயற்பட வேண்டும். | காணி ஒதுக்கப்பட்டு காட்டி இருக்கவில்லை எனவும் 2020 ஜனவரி 20 திகதி நடைபெற்ற பொதுமக்கள் மனுக் குழுவின் தீர்மான இலக்கம் 2019/ மாமநச/பொதுமக்கள்மனு/03 கீழ் 14 நாட்களுக்குள் காணியின் பகுதியை அளவை செய்து உரித்தாக்கி தர வேண்டும் என அறிவிக்கும் படி எடுக்கப்பட்ட தீர்மானம் 2020 ஜனவரி 11 திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் இலக்கம் 203 இ.8 கொண்ட சபைத் தீர்மானத்தின் மூலம் அனுமதிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | நடைபாதை மற்றும் பொது இடங்களுக்கு தடை ஏற்படும் விதத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 11 அங்கீகாரமற்ற வர்த்தக நிலையங்கள் தொடர்பாக சபை சட்டநடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அங்கீகாரமற்ற வர்த்தக நிலையங்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அங்கீகாரமற்ற வர்த்தக நிலையங்களை அப்புறப்படுத்திக்கொள்ளுமாறு அறிவுறுத்தி இருந்த போதிலும் தற்போது அவற்றில் சில அகற்றப்பட்டிருந்ததுடன், ஏனைய வியாபார நிலையங்களை அவ்விடயத்தில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி அறிவுரை வழங்கியுள்ளேன். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| சபையின் சிரேஷ்ட நிலையில் 05 பதவிகளும், மூன்றாம் நிலையில் 03 பதவிகளும், இரண்டாம் நிலையில் 23 பதவிகளும் மற்றும் ஆரம்ப நிலையில் 51 பதவிகளும் வெற்றிடங்களாகவும், இரண்டாம் நிலையில் மற்றும் ஆரம்ப நிலையில் உள்ளவாறான பதவி யணியில் அடங்கியுள்ள 12 மிகைப் பதவிகள் உட்பட 110 மிகை பதவியணியை முறைப்படுத்து வதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | ஆளணி பதவிகளின் வெற்றிடங் களை நிரப்பு வதற்கு மற்றும் மிகைகளை முறைப்படுத் துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது 02 சிரேஷ்ட பதவிகள் நிரப்பப்பட்டிருந்ததுடன், ஒரு பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை சில பதவிகளுக்கான ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் குடும்ப சுகாதார உத்தியோகத்தர் தொடர்பாக காணப்படும் வெற்றிடப் பதவிகள் சுகாதாரப் பணிப்பாளர் அலுவலக உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதுடன், ஆரம்ப பிரிவின் வெற்றிடங்களுக்காக ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன், மீதியான வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். மிகைப் பதவிகள் 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் எதிர்காலத் தேவைகளுக்காக நியாயப் படுத்தும் அறிக்கை ஒன்றின் மூலம் அங்கீகாரம் பெறுவதற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு சமர்ப்பித்துள்ளேன். |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| மீளாய்வாண்டு இறுதி அளவில் 10 வருடங்களுக்கு முன்னர் ஓய்வு பெற்ற, இறந்த, சேவையை விட்டுச் சென்றுள்ள மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள ஊழியர்களின் இடர்கடன், விழா முற்பணம், விஷேட கடன், வாகனக் கடன் மற்றும் வெள்ள முற்பணமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 330,229 தொகைக்கான கடன்மீதி ஒன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | ஊழியர் கடனை விரைவாக அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது. | இது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கை ஒன்றிற்கான தீர்மானம் எடுப்பதற்கு சபைக்கு சமர்ப்பித்தேன். சபைத் தீர்மானத்தின் பிரகாரம் ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்கு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெறுவதற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு சமர்பித்திருந்த போதிலும் இது வரை இதற்கான பதில் அல்லது வேறு அறிவுரைகள் ஏதும் வழங்கியிருக்கவில்லை. |

## 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான சனத் ஜயசூரிய விளையாட்டுத்திடல் கட்டணம் அறவீடு செய்யாமல் சபைத் தீர்மானம் ஒன்று இன்றி சாஹித்திய ப்ரதீப றுருனு பொத் வசந்தய இற்காக வழங்கியிருந்ததுடன் கண்காட்சி நடைபெற்ற காலப் பகுதியில் வளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 41 விற்பனை குடில்களில் இருந்து 31 விளம்பர அறிவித்தல் பலகை களில் இருந்து மற்றும் கொடிக் கம்பங்களுக்காகவும் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. | உரிய கட்டணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துரை வழங்கியிருக்க வில்லை. |
| (ஆ) | 06 வாகனத் தரிப்பிடங்களில் இருந்து கட்டணம் அறவீடு செய்வதற்காக கேள்வி நடைமுறைக்கு புறம்பாக மூன்றாம் தரப்பினர் ஒருவருக்கு வழங்கியிருந்தது. | கேள்வி நடைமுறையின் படி செயற்பட வேண்டும். | முன்னோடி செயற்திட்டம் ஒன்றாக நடைபாதையில் நிறுத்தியிருக்கும் வாகனங்களில் இருந்து கட்டணம் அறவீடு செய்வதற்கு 2018 திசெம்பர் 11 திகதி 07:01 (2018/மாமநச/நிதி/பிர/11) சபை அங்கீகாரத்தின் படி செயற்பட்டுள்ளேன். |
| (இ) | கொடுவேகொட, தர்மபால மாவத்தயில் வாணிப பயன்பாட்டிற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த அங்கீகாரமற்ற கட்டடம் ஒன்றிற்கு மேவகை அங்கீகாரம் வழங்குவதற்காக சமர்ப்பித்திருந்த அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் 2010-2030 மாத்தறை நகர அபிவிருத்தி அதிகாரப் பிரதேசத்திற்கான அபிவிருத்தித் திட்டம் (II பிரிவேடு) திட்டமிடல் மற்றும் கட்டிடங்கள் பிரமாணத்தின் பிரகாரம் கட்டடங்களின் எல்லை உரிய அளவில் காணப்படாததுடன் ரூபா 298,740 இற்கான கட்டணம் குறைவாக அறவிடப்பட்டுள்ளது. மேலும் 3 வாகன நிறுத்தும் இடங்களுக்காக ரூபா 1,000,000 தொகை குறைவாக அறவீடு செய்யப்பட்டுள்ளது. | 2010-2030 மாத்தறை நகர அபிவிருத்தி அதிகார பிரதேசத்திற்கான அபிவிருத்தி திட்டத்தில் (ii பிரிவேடு) திட்டமிடல் மற்றும் கட்டிடங்கள் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதேசத்திற்கு பொறுப்பான தொழிநுட்ப உத்தியோகத்தரின் அறிக்கையை அடிப்படையாக கொண்டு முன்னர் காணப்பட்ட பழைய கட்டிடம் ஒன்றென கணித்து வரையறைகளை கவனத்தில் எடுக்காமல் கட்டணம் அறவிடப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஈ) சபைக்குச் சொந்தமான கொடுவேகொட வீட்டுத் தொகுதியிலுள்ள நலன்பெறுவோரிடம் மீளாய்வாண்டு ஜூலை 31 திகதியில் உள்ளவாறு ரூபா 4,428,352 இற்கான நிலுவை வாடகை ஒன்று அறவீடு செய்யப்பட வேண்டிக் காணப்பட்டதுடன் கொடுவேகொட பழைய பாதையில் அமைந்துள்ள வீடமைப்புத் திட்டத்திலுள்ள 08 நலன்பெறுவோரிடம் ரூபா 90,960 இற்கான நிலுவை வாடகை ஒன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | விரைவாக நிலுவை வாடகை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | பழைய தங்காலை வீதி வீடமைப்புத் திட்டத்தின் காணி உரிமையை முடிவு செய்த பின்னர் இந்த நில வாடகை பதிவேட்டில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள் சபைக்குச் சொந்தமான ஆவணம் ஒன்று எனின் அதன் பிரகாரம் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மற்றும் பழைய சந்தை பாதையின் நலன்பெறுவோர் தொடர்பாக வருமான பரிசோதகர் அறிக்கை ஒன்று பெற்றுக்கொண்டு நிதிக் குழுவுக்கு சமர்ப்பித்து தொடர் நடவடிக்கை எடுப்பேன். |

### 3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான வல்கம நூலகத்திற்கான வருடாந்த நீர்க் கட்டணம் ரூபா 146,568 தொகையாக காணப்பட்டதுடன், மாதாந்த சராசரி நீர்க் கட்டணம் ரூபா 12,214 தொகையாகக் காணப்பட்டது. எனினும் கடந்த ஆண்டிற்கான வருடாந்த நீர்க் கட்டணம் ரூபா 8,432 தொகையாகக் காணப்பட்டதுடன் மாதாந்த சராசரி நீர்க் கட்டணம் ரூபா 703 ஆகிய குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. அதன் பிரகாரம் நீர் பயன்படுத்துதல் சமமற்ற தன்மை ஒன்றினை காட்டியது. | முறையான விசாரணை ஒன்று மேற் கொண்டு பொறுப்புச் சொல்ல வேண்டியவர் களிடம் அறவீடு செய்யப்பட வேண்டும். | நீர் மனுவுக்கு வெளியே குழாயில் நீர்க் கசிவு ஒன்று காணப்பட்டதனால் சபையின் நீர்க் குழாய் தொழிநுட்ப வியலாளரை பயன்படுத்து புதிய குழாய் முறைமை ஒன்று போடப்பட்டு அப் பிரச்சினை தீர்த்துள்ளேன். |

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.6.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மாத்தறை மா நகர சபைக்கு சொந்தமான உயன்வத்த உதைப்பந்தாட்ட விளையாட்டுத் திடலை முறையான சாட்டுதல் ஒன்று மற்றும் கட்டண அறவீடு ஒன்று | முறையான சாட்டுதல் மேற்கொள்ளப் பட வேண்டும். | அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | இன்றி உதைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் 2009 ஆண்டு முதல் பயன்படுத்தப் பட்டு வருகின்றது. சபையின் அங்கீகாரம் இன்றி ரூபா 5,000,000 விட மிகையான பெறுமதியுடைய இந்த காணியில் விளையாட்டு மண்டபம் மற்றும் அலுவலகம் ஆகியவற்றை கொண்ட கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், உதைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் இந்த விளையாட்டுத் திடலை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் 2009 ஆண்டு முதல் மீளாய்வாண்டு ஜுன் வரை ரூபா 1,302,100 இற்கான வருமானம் ஒன்றினை உழைத்திருந்தது. | | |
| (ஆ) | இலக்கம் தபபா/15 மற்றும் 2007 மார்ச் 19 ஆந் திகதிய தென் மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் அறிவுரை கடிதத்தின் பிரகாரம் உள்ளுராட்சி மன்றங்களுக்கு சொந்தமான அனைத்து ஆதனங்களும் மீள் அளவை மேற்கொண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறிவுரை கடிதத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | தற்போது சபையின் வேலைப் பிரிவினால் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | சபைக்குச் சொந்தமான 40.91 பர்சஸ் கொண்ட 03 காணிகள் சபையின் அங்கீகாரம் இன்றி தனியார் தரப்பினரினால் பயன்படுத்தப்பட்டு காணப்படுகின்றது. | விரைவாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கப்பட வில்லை. |
| (ஈ) | சபைக்குச் சொந்தமான 101 ஏக்கர் 01 ரூட் 2.43 பர்சஸ் அளவை கொண்ட 99 காணிகள் தொடர்பாக உரித்துரிமை உறுதிகள் மற்றும் வரைவுகள் தயாரித்திருக்கவில்லை. | உரித்துறுதி மற்றும் வரைவுகள் தயாரிக்கப்பட வேண்டும். | விரைவாக உரித்துறுதி மற்றும் வரைவுகள் தயாரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

**3.6.2 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 07 ஏக்கர் 03 ரூட் 18.235 பர்சஸ் அளவான 57 காணிகள் பயன்தரு கருமங்களுக்காக ஈடுபடுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | ஆக்கபூர்வமான கருமங்களுக்கு ஈடுபடுத்தப்பட வேண்டும். | கருத்துரை வழங்கியிருக்க வில்லை. |
| (ஆ) | மீளாய்வாண்டு ஜூலை 30 திகதி வெளிக்கள பரிசோதனையின் போது சபை வளவில் 24 வாகனங்கள் மற்றும் இயந்திரப் பொறிகள் விளைவற்றுக் காணப்பட்டது. | செயற்படு நிலையில் பேணப்பட வேண்டும். | வாகனங்களை நிறுத்தி வைக்கக் கூடிய கட்டிடம் ஒன்று இன்மையின் காரணத்தினால் வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தப் பட்டிருந்த வாகனங்கள் இந்த நிலைமைக்கு முகங்கொடுத்துள்ளது. |

**3.7 பெறுகை**

**3.7.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக முறையான பெறுகை திட்டம் ஒன்று தயாரிக்கப் பட்டிருக்காததுடன் அவ்வவ் காலாண்டு இறுதியில் நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முறைசார் விதமாக பெறுகை திட்டம் ஒன்று தயாரிக்க ப்பட்டு நாளது வரை ஆக்கப்பட்டு பேணப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்காக பெறுகை திட்டம் ஒன்று தயாரிக்கப் பட்டு சமர்ப்பிப்பேன். |

**3.7.2 வழங்கள் மற்றும் சேவைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆண்டிற்கான இரண்டாம் தர சுகாதார சேவைத் திட்டத்தின் ஏற்பாடுகளின் மீது மாத்தறை கொடுவேகொட கடலோர சிறுவர் பூங்காவுக்காக உபகரணங்கள் பொறுத்துவதற்காக கடந்த ஆண்டு ரூபா 3,477,933 இற்கான செலவு ஒன்று மேற்கொண்டிருந்ததுடன், உபகரணங்கள் பொருத்துவதற்கு முன்னர் முன்சாத்தியக் கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. தொழிநுட்ப மதிப்பாய்வு | 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மதிப்பீடு செய்ய வேண்டும். | சிறுவர் பூங்கா நிறுவுவதற்கு பொறுத்தமான வசதியுடனான இலகுவாக நெருங்கக் கூடிய வேறு இடம் ஒன்று சபையிடம் காணப்படாமையால் சிறுவர் பூங்கா இவ்விடத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. |

குழுவினால் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்திருந்த நிறுவனத்தை விட ரூபா 1,099,990 மிகையாக கூறுவிலை சமர்ப்பித்திருந்த நிறுவனத்தில் இருந்து கொள்வனவு செய்வதற்காக தீர்மானித்த போது அதற்கான விடயங்கள் தொடர்பான கவனம் செலுத்தி இருக்கவில்லை. மேலும் உபகரணங்களை கொள்வனவு செய்து பொறுத்திய பின்னர் உபகரணங்கள் உரிய நியமத்தில் காணப்படுகின்றனவா என தொழிநுட்ப உத்தியோகத்தரின் அறிக்கை பெற்றிருக்கவில்லை. 2019 செப்தெம்பர் 10 திகதி அளவில் அனைத்து உபகரணங்களும் துருப்பிடிக்கக் கூடிய நிலையில் காணப்பட்டது.